# குறுந்தொகை

**முன்னுரை :**

அன்பும் அறனும் விளையும் திருமண வாழ்வைத் தலைவி விரும்புவதையும் இருமனம் இணையும் திருமணத்தை உறுதி செய்ய இரு வீட்டார் முனைவதையும் அகத்திணை இலக்கியத்தின் இலக்கியமாய் விளங்கும் குறுந்தொகை பாடல் காட்சிப்படுத்துகிறது.

**நூற்குறிப்பு :**

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது
- "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பித்து உரைக்கப்படுவது.
- உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல்.
- முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூல்.
- இயற்றியவர் : வெள்ளிவீதியார்
- தொகுத்தவர் : பூரிக்கோ
- கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் : பாரதம் பாடிய பெருந்தேவனார்.

**வெள்ளிவீதியார் - குறிப்பு :**

- சங்ககாலப் பெண்பாற் புலவர்களில் ஒருவர்.
- சங்கத்தொகை நூல்களில் 13 பாடல்களைப் பாடியுள்ளார்.
- இயற்றிய நூல் : குறுந்தொகை.

**பாடல் :**

"அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்று பெரிது என்னும் ஆங்கண தவையே."

- வெள்ளிவீதியார்.

VMHSSS

பா வகை : நேரிசை ஆசிரியப்பா

திணை : குறிஞ்சித் திணை

துறை : தலைவன் சான்றோரைத் தலைவியின் தமர்பால் மணம் பேசி வர விடுப்ப, தன் தமர் மறுப்பாரோ என்று அஞ்சிய தலைவியை நோக்கி, "தலைவன் வரைவை நமர் ஏற்றுக்கொண்டனர்; நீ கவலை ஒழிவாயாக" என்று தோழி கூறியது.

**துறை விளக்கம்** :

தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச, சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்து விடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவனின் தரப்பைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக் கொண்டனர் என்று தேற்றுகிறாள்.

**பாடலின் பொருள்** :

- ஊர் மக்களின் அவையில் முன்பு பலமுறை தலைவனின் பரிசப் பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டன.
- "தலைவி! இன்றோ தலைப்பாகை அணிந்து கையில் தண்டுடன் இருக்கும் முதியவர்கள் மூலமாகத் தலைவன் போதும் என்று சொல்லத்தக்க அளவு பரிசப் பொருட்களைக் கொண்டு வந்து அவைமுன் வைத்துள்ளான்.
- மணம் பேசச் செய்துள்ளான்.
- அவையிலிருந்த தலைவியின் உறவினரும் கண்டு, 'நன்று நன்று'என்று கூறி மகிழ்ந்தனர்.
- நம்முடைய ஊரில் முன்பெல்லாம் பரிசத்தொகை போதவில்லை என்பதற்காகப் பிரித்து விடப்பட்ட தலைவன் தலைவியரைச் போதிய பரிசத்தொகை கிடைத்தவுடன் சேர்த்து வைப்போர் இருந்தனர் தானே?" என்று தோழி கூறுகிறாள்.

VMHSSS